# நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம், சென்னை – 600 005

ந.க.எண்.12057/2010/ஆர்2 001475 நாள் 15. 03.2010

**சுற்றறிக்கை**

| | |
|---|---|
| 17 MAR 2010 | மாநகராட்சிகள்/நகராட்சிகள் – ஏலம்/ஒப்பந்தப் புள்ளி – நடைபெறுவது – ஏலம் தொடர்பில்லாதவர்கள் கலந்து கொள்வது தவிர்த்தல் குறித்து சுற்றறிக்கை அனுப்புதல் – தொடர்பாக |

மாநகராட்சிகள்/நகராட்சிகளில் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி நடைபெறும் பொழுது, ஏலத்திற்குத் தொடர்பில்லாத சில நபர்கள் மற்றும் மன்ற உறுப்பினர்கள் சிலர் குறுக்கீடு செய்ததால், ஏலம் நடத்த முடியாமல் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி பெறுதல் ஒரு சில இடங்களில் ஒத்தி வைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்ற விவரம் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கவனத்திற்குத் தெரிய வந்துள்ளது.

எனவே, இவ்வாறான சூழ்நிலையைத் தவிர்க்கும் பொருட்டு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி நடைபெறும்பொழுது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி தொடர்பான துணை விதிகள் (Byelaws) மற்றும் நிபந்தனைகளில் குறிப்பிட்டவாறு, ஏலம் தொடர்பில்லாத வெளிநபர்களோ, மன்ற உறுப்பினர்களோ யாரும் கலந்து கொள்ளக் கூடாது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அனைத்து நகராட்சி/மாநகராட்சி ஆணையர்கள் இந்த சுற்றறிக்கையினைத் தவறாது பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

**ஒம்./–ப.செந்தில்குமார்**
**நகராட்சி நிர்வாக இயக்குர்**

பெறுநர்

1) அனைத்து மாநகராட்சி ஆணையர்கள்
2) அனைத்து நகராட்சி ஆணையர்கள்
3) அனைத்து செயல் அலுவலர்கள்
4) அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

கண்காணிப்பாளர்